பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்: வே. வ. இராமசாமி

குரோதி௵ ஆவணி௴ செப்டம்பர் 1964

வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

தியாகராயநகர் : : சென்னை — 17

விலை: 25 காசு

பொருளடக்கம்

பக்கம்

1. ஓர் அரிய யோசனை—(தலையங்கம்) ... 3

2. பனந்தும்பு கொள்முதல் ... 5

3. குடிப்போர் தொகை கூடியுள்ளதா?—திரு. ஜி. இராமாநுஜம் ... 11

4. "நான் கண்ட கருத்தரங்கு"—திரு. டி. எஸ். திருமலை ... 13

5. திருவாப்புடையார் கோவில் நெல் கைக்குத்தல் தொழில் கூட்டுறவு சங்கம் ... 14

6. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விதிகள் ... 16

குழந்தைகள் நலனுக்குச்
சிறந்தது பனங்கற்கண்டு

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 குரோதி ௵ ஆவணி ௴ பாளை 11

ஓர் அரிய யோசனை

(வே. வ. இராமசாமி)

மாநில சம்மேளனம் கடந்த நான்காண்டு காலமாகப் பனைச் செல்வம் எனும் இவ்விதழைச் சீராகவும்—சிறப்பாகவும் நடத்திவருவதன் விளைவாகப் பட்டி தொட்டியெங்கும் பரவிக் கிடக்கும் 1,472 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் செய்திகளை அவ்வப்போது அறியவும், அறிந்தபடி செயல்படவும் முடிகின்றது. பனைத்தொழில் சம்பந்தப்பட்ட நல்ல பல திட்டங்களையும், அரசினர் உத்தரவுகளையும் அவ்வப்போது பிரசுரித்து வருவதால் இதன் அவசியத்தை அனேக ஆரம்பச் சங்க உறுப்பினர்கள் உணர்ந்து எம்மை ஊக்குவித்து வருகின்றனர். இவ்வெளியீட்டில் தனி அக்கறையும், ஆர்வமும் காட்டிவரும் மாநில-கதர் கிராமக் கைத்தொழில் கழகக் காரியதரிசி திரு. வெ. பத்மநாபன் அவர்களும், மேற்படி கழகத்தின் துணை இயக்குநர் திரு. டி. வி. இராமநுஜம் அவர்களும் இப்பத்திரிகையை நன்கு வளர்க்க மனமார எண்ணுகின்றனர். எனினும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் மிகப்பலர் இதைப் படித்துப் பயன்பெற முன்வரவேண்டும்.

அனுமதிச் சீட்டுப் பெற மட்டும் சங்கத்தை அணுகினால் போதாது. குறைகளைத் தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகளிலும், சங்க வளர்ச்சியிலும் பெரும் பங்குகொண்டு பல பொறுப்புகளைத் தாமாக ஏற்று நடத்த முன்வர

வேண்டும். ஆரம்பச் சங்கங்களுக்கும், மாநில சம்மேளனத்துக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தும் பணியைத்தான் பனைச் செல்வம் செய்கிறது. இதை உணர்ந்தால் பனைச் செல்வம் வளர்ந்து சிறப்புறவேண்டும் என்ற அக்கறை தானுகவே பிறக்கும். ஒவ்வொரு சங்கமும் இப்பத்திரிகை கிடைத்த வுடன் படித்து, அதன் கருத்துக்களை மனதிலிறுத்திக் கொள்ளவேண்டும். அந்தந்தப் பிராந்தியங்களில் நிலவுகின்ற சமூக, பொருளாதார, தொழில் பிரச்சினைகளை எமக்கு அனுப்பி விளக்கம் பெறலாம். மேலும் திட்டங்கள் வகுக்கும்போது சங்க உறுப்பினர்கள் கூறும் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பத் திட்டமிட பேருதவியாக இருக்கும். எனவே இவ்விதழை உங்கள் தோழனுக—தூதனுக ஏற்பீர்களாயின் பல பிரச்சினைகளை இதன் மூலமாகவே ஆய்ந்தறிந்து தீர்வு காணலாம்.

தனி நபர் தமது பனைத் தொழில் அனுபவத்தைச் சுவையாகவும், சுருக்கமாகவும் எழுதி, தங்கள் புகைப் படத்துடன் அனுப்பிவைத்தால் அது பிரசுரிக்கப்படும். ஒவ்வொரு பனைத் தொழில் வல்லுநரும் தங்கள் தேவை களையும், தொழில் பிரச்சினைகளையும் எழுதியனுப்பலாம். இதுகாறும் இப்பத்திரிகையைப் பனைத் தொழில் வல்லுநர்கள் பயன்படுத்திக்கொள்ள வில்லை என்றே சொல்லலாம். இனியாவது இது தங்களுடைய பத்திரிகை என்பதை உணர்வார்களென நம்புகிறேம்.

தற்போது சமூகக் கல்வி நிலையங்கள், பஞ்சாயத்து யூனியன் தகவல் நிலையங்கள், பொது நூலகங்கள் இதை வாங்குவதால் பனைச் செல்வத்தை ஒவ்வொரு பனைத் தொழில் வல்லுநரும் சாதனமாகக் கொண்டு குறைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அப்போதுதான் பொது மக்களும் இத்தொழிலில் தங்கள் பார்வையைச் செலுத்தி, இதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப் பார்கள். தோப்புக்களில் தனித்து வாழ்ந்தே பழகிவிட்ட நமக்கு மக்கள் தொடர்பு இன்றைய நிலையில் இன்றியமையாததாகும். மக்களாட்சி அமைப்பில் பங்குபெறும் தகுதி பெற்றுள்ள நாம் பழைய எண்ணச் சுழலிலே சிக்கியிருந்தோமானுல் நாடு வளம்பெற நம்மால் என்ன பணி புரியமுடியும்? சமுதாயத்திற்கு இனிப்பை வழங்கிவிட்டு இதயத்தில் கசப்பைச் சேமித்து வைத்துக்கொள்ளாமல் பூசல்களையும், பிணக்குகளையும் மனம்விட்டு பேசித் தீர்த்துக்கொண்டால் மட்டுமே நம்முடைய லட்சியப் பயணம் வெற்றிபெறும்.

ஒவ்வொரு வருடமும் பனைத் தொழில் வளர்ச்சிக்காகப் பல லட்சங்கள் செலவிடப்படுகின்றன. இதனுல் சீரான வளர்ச்சி ஏற்படுகிறது. திட்டப் பணிகளை மனமுவந்து ஏற்க இன்று மறுத்தால், நாளை வளர்ச்சி பெருமல் பின்தங்கிய நிலையிலேயே இருக்கவேண்டியதிருக்கும். எனவே இப்பொழுது கிடைக்கும் உதவிகளைக் கொண்டு தொழிலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது பேரவா. உங்கள் ஐயங்கள், ஆலோசனைகள் எதுவானுலும் பனைச் செல்வத்தில் மூலம் தெரிவித்துப் பயன் பெறுவீர் என நம்புகிறேம். இவ்விதழ் உங்கள் உற்ற நண்பன்—உயிர்த் தோழன் என்பதை மறவாதீர்! இது உங்கள் குரல்!

பனந்தும்புக் கொள்முதல்

20—6—1964 அன்று சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் நடந்த தும்புக் கொள்முதல் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கொள்முதல்

(அ) ஆரம்பப் பனைவெல்ல சங்கங்கள் :

தும்பு, ஈர்க்கு ஆகிய ஏற்றுமதிப் பொருட்களை அங்கத்தினர்களிடமிருந்து ஆரம்பச் சங்கங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யவேண்டும்.

ஆரம்பச் சங்கத்திற்கு ஈர்க்கு, தும்பு முதலியவற்றை விற்க முன்வராத அங்கத்தினர்களுக்கு ஆரம்பச் சங்கங்கள் கடன், மானியம் முதலிய வசதிகள் அளிக்கக்கூடாது.

இந்த ஆண்டு தும்பு, ஈர்க்கு முதலியவைகளை ஆரம்பச் சங்கத்தின் அங்கத்தினராக இல்லாதவர்களிடம் இருந்தும், மற்றும் தனிப்பட்டு தொழில் செய்பவர்களிடமிருந்தும் வாங்கலாம். அங்கத்தினராக இல்லாதவர்களை நாளடைவில் (Sympathizer) அனுதாபிகளாகப் ஆரம்பச் சங்கங்களில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(ஆ) மாவட்ட பனைவெல்ல சம்மேளனங்கள் :

மாநில சம்மேளனமே தும்புக் கொள்முதலை செய்யவேண்டும். இதற்காக மாவட்ட சம்மேளனங்கள் மாநில சம்மேளனத்தின் பிரதிநிதிகளாக இருந்து தும்பு, ஈர்க்கு முதலியவைகளைக் கொள்முதல் செய்யவேண்டும். மாவட்ட சம்மேளனம் இல்லாத மாவட்டங்களில் மாநிலச் சம்மேளன சிப்பந்திகள் நேரடியாக மாவட்ட சம்மேளனங்கள் வாங்கும் விலையின் மற்ற அடிப்படையில் கொள்முதல் செய்வார்கள்.

ஆங்காங்கு உள்ள விலைகளையும் மாநில சம்மேளனம் அனுமதித்துள்ள விலையையும் அனுசரித்து வாங்கவேண்டும். கதர் போர்டு எண். 28620/64 வி. ஜே. (1) 16—6—'64 தேதிய சுற்றறிக்கையில் சொன்ன தோராய கொள்முதல் விலையை அவ்வப்போது குறிப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். மற்ற இடங்களில் உள்ள தும்பு விலைகளை அவ்வப்போது மாவட்ட சம்மேளனங்களுக்கும், தும்பு கொள்முதல் சிப்பந்திகளுக்கும் மாநில சம்மேளனம் அடிக்கடி தெரியப்படுத்தும். இந்த விலைக்கு அதிகமாகக் கொள்முதல் செய்யக்கூடாது.

ஆரம்பச் சங்கங்கள் நேரடியாக கொள்முதல் செய்த ஈர்க்கு, தும்புகளை மாவட்ட சம்மேளனங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்தல் வேண்டும். மாவட்ட சம்மேளனங்கள் ஆரம்பச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பணத்தை 'கொள்முதல் முன் பணமாக' (Fibre purchase advance) கொடுக்கவேண்டும். மாவட்ட சம்மேளனங்களுக்குத் தேவைப்படும் முன் பணத்தை உடனுக்குடன் மாநில சம்மேளனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாவட்ட சம்மேளனங்கள், கொள்முதல் செய்த சரக்கை மாவட்ட சம்மேளனக் கிட்டங்கியில் சேமித்து வைக்கவேண்டும். கொள்முதல் செய்யும் இடத்திலிருந்து கிட்டங்கியில் அடுக்கி வைக்கும்வரை ஏற்படும் செலவு மாநில சம்மேளனத்தைச் சேரும். ஆங்காங்கு உள்ள மாநில சம்மேளன சிப்பந்திகளிடம் கிட்டங்கியின் சாவி இருக்கும்.

(இ) மாநில சம்மேளனம் :

மாநில சம்மேளனம் மாவட்ட சம்மேளனங்களிலிருந்து கொள்முதல் செய்யும் பொழுது அட்வான்ஸ் தொகை பிடித்துக்கொண்டு பட்டுவாடா செய்யவேண்டும்.

மாவட்ட சம்மேளனங்கள் கொள்முதல் செய்து கொடுத்த தும்பின் கொள்முதல் விலையின் பேரில் மாநில சம்மேளனம் 2 சத விகிதம் கமிஷன் (கழிவு) கொடுக்கவேண்டும். இந்த 2 சத விகிதம் கமிஷனைக் கொண்டு மாவட்ட சம்மேளனங்களும், ஆரம்பச் சங்கங்களும் தங்களுக்குள் ஒப்புக்கொண்டபடி கமிஷனை பிரித்துக் கொள்ளவேண்டும்.

சுத்தம் செய்தல்

(சுத்தம் செய்து பதப்படுத்துதல்)

தும்பு, ஈர்க்கு முதலியவைகளைச் சுத்தம் செய்து பதப்படுத்துதலை மாநில சம்மேளனமே கூடுமானவரை மாவட்ட சம்மேளனங்கள் மூலமாகச் செய்யவேண்டியது. இவ்விதம் பதப்படுத்துவதற்குச் செலவான தொகையை மாநில சம்மேளனம் நிர்ணயிக்கும் கூலி விகிதப்படி மாவட்ட சம்மேளனங்கள் மாநில சம்மேளனத்தில் இருந்து அவ்வப் போது பெற்றுக்கொள்ள வேண்டியது. தேவையானல் மாநில சம்மேளனம் ஆங்காங்கு சுத்தம் செய்யும் ஏற்பாடுகளைத் தானே செய்துகொள்ளும். அவ்வாறு மாநில சம்மேளனம் சுத்தம் செய்யும் தும்பை ஏற்றுமதிக்கு இலாயக்காக செய்து நேரடியாக விற்பனை செய்ய வேண்டும். தும்புக் கொள்முதல் நிலையங்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

அயல்நாட்டிற்கு தும்பு ஏற்றுமதி வியாபாரத்தை அதிகப்படுத்தவும், நேரிடையாக தும்பு ஏற்றுமதி வியாபாரத்தைக் கவனிக்கவும் மாநில சம்மேளனம் உடனடியாக வேணடிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

மார்க்கட் விலையை அனுசரித்து, தங்களுக்குள் ஒப்புக்கொண்ட விலைக்கு திருநெல்வேலி மாவட்ட சம்மேளனத்திற்கு தேவையான கோரா, சைஸ். தும்பு முதலிய வைகளை தேவையானபோது மாநில சம்மேளனம் கொடுக்கவேண்டும்.

எடை போடுவதற்கும் சுத்தம் செய்தல், பதப்படுத்துதல் முதலியவைகளுக்கும் வேண்டிய கருவிகளை மாநில சம்மேளனம் வாங்கிக் கொடுக்கும்.

தற்காலிகமாக ஒவ்வொரு தும்பு கொள்முதல் நிலையத்திலும் தும்பு நல்ல முறையில் கொள்முதல் செய்வதற்கு உதவி செய்ய தும்பு கொள்முதல் செய்வதில் கைதேர்ந்த சிப்பந்திகளை திருநெல்வேலி மாவட்ட சம்மேளனம் அனுப்பும்.

வியாபாரம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் உடனடியாகத் தும்பை கொள்முதல் செய்யவேண்டும். இதற்காகக் கீழ்க்கண்ட இடங்களில் கூடி முடிவு செய்து தும்பை கொள்முதல் செய்ய வேண்டும்.

வரிசை எண்	மாவட்டம்		கொள்முதல் செய்யவேண்டியவர்	ஓர் ஆண்டில் கொள்முதல் மதிப்பு ரூபாய்
1.	திருநெல்வேலி	...	திரு. கே. சிவசுப்ரமணியம், காரியதரிசி, திருநெல்வேலி மாவட்ட பனைவெல்ல சம்மேளனம்	7 லட்சம்
2.	கன்னியாகுமரி	...	1 திரு. மகாதேவன், காரியதரிசி, கன்னியாகுமரி மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் 2 திரு. கே. சுப்ரமணியம், காரியதரிசி, திருநெல்வேலி மாவட்ட பனைவெல்ல சம்மேளனம்	7 லட்சம்
3.	திருச்சி	...	1 திரு. ஆர். செல்லையா, விசேஷ அதிகாரி-(நீரா) சென்னை மாநில சம்மேளனம் 2 திரு. துரைசாமி, காரியதரிசி, திருச்சி மாவட்ட பனைவெல்ல சம்மேளனம்	5 லட்சம்
4.	சேலம்	...	1 திரு. கா. சேவியர், விளம்பர அதிகாரி, சென்னை மாநில பனைவெல்ல சம்மேளனம் 2 திரு. கிருஷ்ணமூர்த்தி, காரியதரிசி, சேலம் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம்	7 லட்சம்
5.	செங்கற்பட்டு	...	திரு. எம். கணேசன், நிர்வாகி, சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம்	2 லட்சம்
6.	தென் ஆற்காடு	...	,, ,,	3 லட்சம்
7.	தஞ்சாவூர்	...	திரு. மாரிமுத்து, மாநில சம்மேளன நீரா பார்லர் இன்சார்ஜ், தஞ்சாவூர்	1 லட்சம்
8.	கோயம்புத்தூர்	...	1 திரு. கா. சேவியர், விளம்பர அதிகாரி, சென்னை மாநில பனைவெல்ல சம்மேளனம் 2 திரு. சுவாமிநாதன், காரியதரிசி, கோயம்புத்தூர் மாவட்ட பனைவெல்ல சம்மேளனம்	6 லட்சம்
9.	மதுரை	...	1 திரு. ஆர். எஸ். எட்வர்ட், விற்பனை மேனேஜர், மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் 2 டெக்னிகல் அசிஸ்டென்ட், மதுரை	4 லட்சம்
10.	இராமநாதபுரம்	...	1 திரு. தாமஸ், டெக்னிகல் அசிஸ்டென்ட் 2 காரியதரிசி, இராமநாதபுரம் மாவட்ட சம்மேளனம்	1 லட்சம்

பனைத்தொழிலில் குறைந்த மூலதனம்; நிறைந்த பலன்

கிட்டங்கிகள்

ஆங்காங்கு மாவட்ட சம்மேளனங்கள் வைத்திருக்கும் கிட்டங்கிகளில் மாநில சம்மேளனத்திற்கு,ஒரு கிட்டங்கி ஒதுக்கிவிட வேண்டியது. அந்தக் கிட்டங்கியை மாநில சம்மேளனம் உபயோகித்துக் கொள்ளும். அதற்கு ஒரு குறிப்பிட்ட வாடகை மாநில சம்மேளனத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். அந்த கிட்டங்கியில் உள்ள சரக்கை மாநில சம்மேளனம் இன்ஸ்யூர் (Insure) செய்து கொள்ள வேண்டியது. கிட்டங்கிகள் இல்லாத இடங்களில் மாநில சம்மேளனம் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது.

எடைபோடும் கருவி (Weighing Balance)

கீழ்க்கண்ட இடங்களுக்குத் தராசை மாநில சம்மேளனம் தங்கள் பொறுப்பில் வாங்கி விநியோகிக்கும்.

1.	திருச்சி மாவட்டம்	...	கரூர்	...	1
2.	கன்னியாகுமரி மாவட்டம்	...	மார்த்தாண்டம்	...	1
3.	மதுரை மாவட்டம்	...	மதுரை	...	1
4.	தஞ்சாவூர்	...	தஞ்சாவூர்	...	1
5.	திருச்சி	...	தென்னிலை	...	1
6.	சேலம்	...	சங்ககிரி	...	1
7.	கன்னியாகுமரி	...	பரக்குன்னு	...	1
8.	மதுரை	...	திண்டுக்கல்	...	1
9.	கோவை	...	பெருந்துரை	...	1

இருப்பு சரி பார்த்தல் (Stock verification)

மாநில சம்மேளனம் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு கிட்டங்கிக்கும் ஒரு கிட்டங்கி பொறுப்பாளரை (Godown Keeper) மாநில சம்மேளனம் நியமித்துக் கொள்ள வேண்டியது. மாநில சம்மேளனத்திலிருந்து சரக்கை அடிக்கடி சரிபார்க்கவும் ஏற்பாடு செய்ய வேண்டியது. கிராமக் கைத்தொழில் அதிகாரி அவர்கள் அடிக்கடி சரக்கை சரி பார்த்துக் கொள்ளவேண்டும்.

அடிப்படைக் குறிப்புப் புத்தகம் (Basic Register)

கொள்முதல் விற்பனை சம்பந்தமாகவும், பதப்படுத்துதல் (Processing) சம்பந்தமாகவும் கையாள வேண்டிய பேரேடுகளை மாநில சம்மேளனம் அச்சடித்துக் கிட்டங்கிக்கும் அனுப்புகிறது.

நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் அளவு

எல்லா கொள்முதல்களையும், 'கிலோ அளவு' அடிப்படையில் கொள்முதல் செய்யவேண்டும். விற்பனையும் அதே முறையில் செய்யவேண்டும்.

தற்காலிகமாக அனுசரித்துக் கொள்முதல் செய்ய வேண்டிய விலை (Rate)

மாவட்டம்		உத்தேச கொள்முதல் விலை விகிதம் (கோரா தும்பு)					
திருநெல்வேலி	...	கிலோ ஒன்றுக்கு	0—95	பைசா	முதல்	1—05	பைசா வரை
கன்னியாகுமரி	...	,,	1—00	ரூபாய்	,,	1—10	,,
திருச்சி	...	,,	0—90	பைசா	,,	1—00	,,
செங்கற்பட்டு	...	,,	0—85	,,	,,	0—90	,,
தென் ஆற்காடு	...	,,	0—85	,,	,,	0—90	,,
கோயம்புத்தூர்	...	,,	0—90	,,	,,	1—00	,,

மதுரை	...	கிலோ ஒன்றுக்கு	0—90	பைசா முதல்	1—00	பைசா வரை
சேலம்	...	,,	0—90	,, ,,	1—00	,,
தஞ்சாவூர்	...	,,	0—85	,, ,,	0—90	,,

குறிப்பு:—கொள் முதல் செய்யும் கோராவில் குறைந்தது 60 சத விகிதம் கறுப்புத் தும்பு கலந்திருந்தால் மேல் குறிப்பிட்ட விலை பொருந்தும். கறுப்புத் தும்பு கலந்திருக்கும விகிதாசாரத்தை பொறுத்து கொள் முதல் செய்யலாம்.

(1) 'தும்பு சுத்திகரிப்புக் கூலி' (Processing wages)

அடித்த பத்தலை சீப்புப் போட கிலோ ஒன்றுக்கு 6 பைசாவுக்கு மேற்படாமல் கொடுக்கலாம்.

(2) சீப்புப் போட்டதை சுத்தம் செய்து, சைஸ் செய்ய

மலையாள சைஸ்	...	9 பைசாவுக்கு மேற்படாமல்
தூத்துக்குடி சைஸ்	...	9 ,,
ஈரோடு சைஸ்	...	9 ,,

(3) சைஸ் செய்யப்பட்ட தும்பை பேல் ஆக்கும் வரை (Dressing)

சாப்ட் (Soft)	...	7″ முதல் 16″	7 பைசா முதல் 8 பைசா
மீடியம் (Medium)	...	7″ முதல் 16″	6 பைசா முதல் 7 பைசா
பிரைம் ஸ்டிப் (Prime stiff)	...	7″ முதல் 16″	5 பைசா முதல் 6 பைசா

தும்பை பேல் செய்வதற்கு 50 கிலோவுக்கு 27 பைசா.

(ஒப்பம்) கே. சம்பந்தம்,
காரியதரிசி.

மக்கள் தற்குறிகளாகவே இருக்கட்டும்!

"மதுப் பழக்கம், ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து, அவனை மிருகமாக மாற்றி, மனைவி, தாய், சகோதரி முதலியவர்களைக்கூட பிரித்துணர, பாகுபடுத்தி அறிய முடியாதபடி ஆக்குகிறது.

"மது, மலேரியா போன்ற விஷ சுரங்களிலும் கொடியது. ஏனெனில், மலேரியா ஒரு மனிதனின் சரீர சக்தியைத்தான் பாதிக்கும். ஆனால், மதுவோ அவனுடைய சரீரத்தையும் குறைத்து, அவனது மனிதத் தன்மையையும் இழக்க வைக்கிறது.

"மதுபானப் பழக்கமுடையவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்களைக் கேளுங்கள். மதுவின் கொடுமை தெரியவரும்.

"ஆயிரம் குடிகாரர்கள் நம்மிடையே இருப்பதைவிட, நம் நாடு வறுமை நாடாகவே இருப்பதை விரும்புவேன். மதுவிலக்கினால் கல்வி வளர்ச்சிக்குக் கிடைக்கும் வருமானம் தடைப்படுகிறதென்றால், நம் நாட்டு மக்கள் தற்குறி களாகவே இருக்கட்டுமே! என்றே கூறுவேன்.

"களவையும், ஒழுக்கமற்ற செயல்களையும் புரிகின்றதைக் காட்டிலும் மிகப் பாதகமானது வேறெதுவுமில்லை. இவ்விரு மாபாதகத்திற்கும் கள்ளுண்டலே தந்தை."

—மகாத்மா காந்தி.

நாட்டின் பாதுகாப்புக்கும்



அபிவிருத்திக்கும்



நெருங்கிய தொடர்பு உண்டு

பாதுகாப்பு முயற்சிகளுக்கு பக்கபலமாக இருக்க உருக்குத் தொழிற்சாலை அதன் உற்பத்தியை பெருக்கியுள்ளது. மில் ரோலிங் திட்டத்தை மாற்றியமைத்துள்ளது. ஆயுதப் படையினருக்குத் தேவையான, மோட்டார் வாகனங்கள், தரப்படுத்தப்பட்டுள்ளன. மின் திட்டங்கள் அமைப்பது துரிதப் படுத்தப்பட்டுள்ளன. ஜெனரேட்டிங் செட்டுகள் அவசரமாக அமைக்கப்பட்டு வருகிறது. ரயில்வே தொழிற்சாலைகளிலிருந்து அதிகமாக வாகன்கள் வெளியே அனுப்பப்படுகிறது. பெரு வழிகளும், இதர ரஸ்தாக்களும் நவீனமாக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் பாதுகாப்புச் சக்தியை பலப்படுத்த புதிய முக்கியத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

உங்களால் முடிந்த ஒவ்வொரு வழியிலும்—எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும்—இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளியுங்கள்.

திட்டத்திற்கு உதவுங்கள்

இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள்

—"PANAI SELVAM", September, 1964.

குடிப்போர் தொகை கூடியுள்ளதா?

தொழிலாளர் தலைவர் திரு. ஜி. இராமானுஜம் பதில்

"மதுவிலக்குச் சட்டத்தைச் சிலர் மீறி வரும் காரணத்தால் அச்சட்டத்தை நீக்கி விடவேண்டும் என்று மதுவிரும்பிகள் கோருகிறார்கள். உலகில் எந்தச் சட்டம்தான் மீறப்படவில்லை? அப்படியானால் சட்டங்கள் எல்லாவற்றையும் ஒழித்து விடுவதா? சிலர் சட்டத்தை மீறுகிறார்கள் என்பதற்காக சட்டத்தையே அகற்றி விடுவதென்பது சரியான விவாதமாகாது. அதற்குப் பதில் அச் சட்டம் மீறப்படாமல் அமுலாவதற்கேற்ற வழிவகை செய்யவேண்டும். மதுவிலக்குச் சட்டத்தை எவரும் மீறாமல் பார்த்துக் கொள்ளுவதுதான் அதற்குச் சரியான வழி. சட்டத்தை நீக்குவதல்ல."

இவ்வாறு இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ராமானுஜம் அறிவிக்கிறார். தேக் சந்த் குழு மதுவிலக்கு பற்றி வெளியிட்டுள்ள சிபார்சுகளை வரவேற்றுத் தொழிலாளர் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் பூரண மதுவிலக்கை ஆதரித்துக் கருத்து வெளியிடும்போது இவ்வாறு கூறியுள்ளார்.

மதுவிலக்கால் அரசாங்க வருமானம் குறைந்துள்ளதா?

திரு. ஜி. ராமானுஜம் இது பற்றி மேலும் கூறும்போது, மதுவிலக்கு காரணமாக அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் வருமானத்தை இழக்க நேரிடுகிறது என்று மதுவிரும்பிகள் கூறும் ஆட்சேபணைக்கு அளித்த பதில் வருமாறு:—

"இந்த ஆட்சேபணை மேலீடாக நோக்கும் போது நியாயம் என்று தோன்றக்கூடும். உண்மையில் அது சரியல்ல. கூர்ந்து நோக்குவோமானால் மதுவிலக்கு காரணமாக அரசாங்கத்திற்கு பன்மடங்கு அதிகமான வருமானம் கிடைத்து வருவது தெரியவரும். மதுவிலக்கு காரணமாக தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் கூடியிருக்கிறது. வாழ்க்கைத்தரம் கூடியுள்ளது என்றால் அதன் அர்த்தம் என்ன? மதுவில் வீணாகும் பொருளை அபிவிருத்திக்குரிய நல்ல வழிகளிலும், வாழ்க்கை வசதிக்குரிய நல்ல வழிகளிலும், இதர உருப்படியான இனங்களிலும் செலவு செய்கிறார்கள் என்பது வெளிப்படை. உணவிலும் உடையிலும், நல்ல பொழுது போக்கு இனங்களிலும் செலவாகும் அப் பணத்தில் ஒரு பகுதி விற்பனை வரியாகவும், தமாஷா வரியாகவும் வரும் பணம் அரசாங்கத்திற்கு வருமானம்தானே? முன்னர் கலால் வரி என்ற ஒரே வரவினம் இருந்தது. இன்று அதுவே பன்மடங்கு அதிகமாக இதர வரவினங்களில் அரசாங்கத்திற்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கைதரமும் உயர்ந்திருக்கிறது."

செலவு கூடியிருக்கிறதா?

மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்துவதில் அரசாங்கத்திற்கு வீணான செலவு ஏற்படுகிறதே என்று மதுவிரும்பிகள் கூறுவது உண்டு. இதற்கும் திரு. ஜி. ராமானுஜம் தகுந்த பதில் அளிப்பதைக் காண்க:—

"மதுவிலக்கு இல்லாதிருக்குமாயின் என்ன நிலை நிலவும் என்பதையும், சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். மதுவின் காரணமாகக் குற்றம் புரிவோர் எண்ணிக்கை அதிகமாயிருக்கும் என்பது தெளிவு. கொலை, களவு போன்ற குற்றங்களுக்கு உதவி செய்வது மது என்பது எல்லோரும் ஒப்புக்

கொள்ளும் உண்மை. குற்றம் அதிகரிக்கும் போது அதைத் தடுப்பதற்கும், தண்டிப்பதற்கும் அரசாங்கத்திற்குச் செலவிராதா? மது விலக்கு காரணமாகக் குறைந்திருக்க வேண்டும் என்பதை யார் ஆட்சேபிக்க முடியும்! ஆகவே, குற்றங்களைத் தடுக்கும் செலவினத்திலும் அரசாங்கத்திற்கு சிக்கனம் ஏற்பட்டிருக்கிறது என்பதே உண்மை."

திருட்டுக் குடியர்கள்

திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சிக் குடிப்பவர்களைக் குறிப்பிட்டு அவர் கூறுவதாவது:—"ஏற்கனவே பழகிப் போன பழைய குடிகாரர்களே இன்றும் திருட்டுத்தனமாகக் காய்ச்சிக் குடிக்கிறார்கள். மது இல்லாதிருக்குமாயின் அவர்களோடு புதிய குடிகாரர்களும் சேர்ந்து அவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்திருக்கும். நல்ல வேளையாக மது விலக்கு காரணமாக பழைய குடிகாரர்களில் சிலர் மாத்திரமே திருட்டுத்தனமாக இன்னும் குடித்து வருகிறார்கள் அவர்கள் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்து வருவது இயல்பு. எதிர்காலத்தில் இந்தத் திருட்டுக் குடிகாரர்களும் அற்றுப் போவார்கள். ஆகவே, மதுவிரும்பிகள் எழுப்பும் கூக்குரலுக்குச் செவி மடுக்கக்கூடாது."

ஒழுக்கம் உயர்ந்ததுள்ளது

பொருளாதாரத் துறையில் மாத்திரமின்றி ஆன்மீக, ஒழுக்கத் துறையிலும் தொழிலாளரின் வாழ்க்கை உயர்ந்திருக்கிறது என்பதை திரு. ஜி. ராமானுஜம் உறுதிப்படுத்துகிறார். இதனால் தொழிலாளர்கள் குடும்பங்களில் நிம்மதி நிலவுகிறது. கணவன்—மனைவி உறவு சுமுகமாக இருக்கிறது. குற்ற நிகழ்ச்சிகள் கணிசமாகக் குறைந்துள்ளன. தொழிலாளர் ஒழுக்கம் உயர்ந்திருக்கிறது என்பதை எல்லாம் அவர் அனுபவத்தோடு கூறுகிறார்.

தொழிலாளர்களுக்கு மாத்திரமின்றி தேசத்திலுள்ள சகல தரப்பினருக்கும் மது விலக்கு உதவியாக இருக்கிறது என்பது வெள்ளிடை ஆகவே தேசம் பூராவும் பூரண மது விலக்கு வேண்டும் என்பது நமது தேசியக் கொள்கையாகும்.

பால் அதிகம் அருந்துவதால் இரத்த ஓட்டம் அதிகரிப்பு

எருமைப் பாலைக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தப் புதிய வழி

பால் மிகச் சிறந்த சத்துணவு என்பது எல்லோரும் அறிந்ததே. அதிலுள்ள கொழுப்பால் உடலுக்கு எவ்விதக் கோளாறும் ஏற்படுவதில்லை. எருமைப் பால் பெரியவர்களுக்கு ஏற்ற உணவு என்றும், குழந்தைகளுக்கு ஏற்றதில்லை என்றும் அதை குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டியிருந்தால், அதில் பசும் பாலிலிருந்து தயாரித்த பால் பவுடரைக் கரைத்துக் கொடுக்கலாம் என்றும் பிரெஞ்சு நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

கட்டாந்தரையிலும் செழிப்புடன் வளர்வது பனை ஒன்றே!

"நான் கண்ட கருத்தரங்கு"

திரு. T. S. திருமலை

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தேது வாசனில் நடந்த அகில இந்திய பனைத் தொழில் மாநாட்டிற்கு 17, 18—5—1964 ஆகிய இரண்டு நாட்கள் பங்கெடுத்துக் கொள்ளும்படி மாநில சம்மேளனம் உத்தர விட்டதற்கிணங்க நானும், திரு. ஜி சுப்பிர மணியமும் 14—5—1964-ல் சென்னையிலி ருந்து புறப்பட்டு சென்றோம். 17—5—'64-ம் தேதி காலை தேதுவாசனை அடைந்தோம்.

அங்கு காலை 10-30 மணிக்கு கருத் தரங்குக் கூட்டம் ஆரம்பமாகியது. அன்று கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு போட்டிகளும வைக்கப்பட்டன.

(1) ஒரு மரத்திலிருந்து மற்ற மரத் திற்குக் கயிற்றின் மூலம் கடந்து செல்லுதல். இவ்வாறு முப்பது மரங்களைக் கயிற்றின் மூலம் யார் சீக்கிரம் கடந்து செல்லுகிறார் களோ அவர்களுக்கு முதல் பரிசு அளிக்கப் படும் என அறிவிக்கப்பட்டது.

(2) மூன்று பனைமரங்களுக்கு யார் நல்ல முறையில் மற்ற மரத்திற்குக் கடந்து செல்லுவதற்கு ஏதுவாக மிகச் சீக்கிரத்தில் கயிறு கட்டுகிறார்களோ அவர்களுக்கும் பரிசு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கயிற்றில் பனைகடப்பதில் குஜராத், மகாராஷ்டிரா, ஒரிசா, வங்காளம், ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு, ராஜஸ்தான் முதலிய மாநிலங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண் டனர். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பிரதி நிதி முப்பது மரங்களையும் மூன்று நிமிடங் களில் கடந்து முதல் பரிசுக்கு உரியவரானார்.

இரண்டாவது போட்டியில் மேற்கண்ட மாநிலங்கள் அனைத்தும் பங்கு கொண்டன. தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஜி. சுப்பிர மணியம் வெற்றிவாகை சூடினார். இவர் 12½ நிமிடங்களில் மூன்று பனைகளையும் இணைத்துக் கட்டி புதிய சாதனையை ஏற் படுத்தினார்.

அன்று இரவில் பாட்டும், நடனமும் நடைபெற்றன. பல திரைப்படங்களும் காட்டப் பெற்றன.

பரிசுகள் வழங்கல்

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் பொருட்டு திரு. கஜானன நாயக் அவர்கள் 18—5—1964-ம் நாள் காலை வந்தார்கள். சென்ற தினத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளைத் திரும் பவும் செய்துகாட்டும்படி வல்லுநர்களைக் கேட்டுக்கொண்டார். அதன் பேரில் காலை 10-மணிக்கு பனை கடப்பதையும், கயிறு கட்டு வதையும் வல்லுநர்கள் செய்து காட்டினர். குஜராத் மாநில சம்மேளனத் தலைவர் அவர் களும், காரியதரிசியும், இதர பிரதிநிதிகளும் திரளாகக் கூடி நின்று பார்வையிட்டனர்.

பிற்பகல் மூன்று மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகியது. குஜராத் மாநில சம்மேளன காரியதரிசி கூட்ட நடவடிக்கைகளை நடத் தினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்குக் கீழ்க்கண்ட பரிசுகள் வழங்கப் பட்டன.

		அளிக்கப்பட்ட பொருளின் பெறுமானம்
கயிற்றால் பனை கடத்தல்:		ரூ.
(1) முதல் பரிசு	...	100
(2) இரண்டாவது பரிசு	...	50
(3) மூன்றாவது பரிசு	...	25
மூன்று மரங்களைக் கயிற்றால் இணைத்தல்:		
(1) முதல் பரிசு	...	50
(2) இரண்டாவது பரிசு	...	25
(3) மூன்றாவது பரிசு	...	15

மேலும் கயிற்றால் பனைகடக்கும் போட்டி யில் கலந்துகொண்ட எல்லா மாநிலங் களுக்கும் பரிவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் கலந்து கொண்டதற்காக எனக்கும் பரிசு கிடைத்தது. பாட்டு, நடனம் ஆகிய கலா நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும் பரிசுகள் அளிக்கப் பட்டன.

இறுதியில் இனிப்புக்கள் வழங்கப் பட்டன. தேசீய கீதம் பாட கூட்டம் இனிது கலைந்தது.

திருவாப்புடையார் கோவில் நெல் கைக்குத்தல் தொழில் கூட்டுறவு சங்கம்

மதுரை திருவாப்புடையார் கோவில் கைக் குத்தல் தொழில் கூட்டுறவு சங்கம் 1957-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இச்சங்கம் தொடக்கத்திலிருந்தே நன்கு செயலாற்றி வருகிறது.

இந்த சங்கத்தின் எட்டாவது ஆண்டு விழா 26—3—1964-ல் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கதர்—கிராமக் கைத் தொழில்கள் கமிஷன் தலைவர் திரு. யு. என். தேபர், அதன் துணைத் தலைவர் திரு. கே. அருணாசலம், சென்னை மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில் குழுச் செயலாளர் திரு. வி. பத்மநாபன் ஆகியோர் இவ்விழாவில் பங்கு கொண்டனர். மதுரைப் பெருமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தார்கள்.

1,100 வயதான மரம்!

மிகப் பெரிதும், பலர் தங்க வசதி யளிப்பதுமான 1,100 வருட கால மரம் ஒன்று மேற்கு ஜெர்மனியில் ஆல்பர்ஷா-ஸென் என்ற இடத்தில் இருந்துவரு கிறது. இதன் அடியில் முன் காலத்தில் அப்பிரதேசத்தின் நீதி பரிபாலனமே நடைபெற்று வந்திருக்கிறது. மேற்கு ஜெர்மனியின் மிகவும் தொன்மையான இம்மரத்தின் குறுக்களவு 12 மீட்டர். இம்மரத்திலிருந்து யாரும் ஒரு குச்சியை கூட ஒடிக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வழியாக ஒரு சாலை அமைக்கவேண்டி இம்மரத்தை வெட்டிவிட வேண்டும் என்று திட்ட மிடப்பட்டது. ஆனால், இயற்கை வனப்புப் பிரியர்களின் ஆட்சேபம் வலுத்ததின் காரணமாக இந்த யோசனை கைவிடப்பட்டது.

இங்கிருந்து 4 மைல் தொலைவிலுள்ள நாகமலைப் புதுக்கோட்டையில் சங்கத்தின் உபயோகத்திற்காக கட்டப்படும் கட்டிடத் திற்கு திரு. யு. என். தேபர் அடிக்கல் நாட்டு விழாவை நடத்திவைத்தார். இச்சங்கம் நன்கு செயலாற்றி வருவதை திரு. யு. என். தேபர் பாராட்டினார். பங்குகொண்ட மக்களும் இச் சங்கத்தின் சேவையையும், சாதனைகளையும் புகழ்ந்தனர்.

இவ்விழாவையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

டைரக்டர்களின் அக்கறை

இத்தொழிலில் அக்கறையுள்ள டைரக்டர் களின் முயற்சியால் இந்த சங்கம் மென் மேலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன் குற்ற பரம்பரையின ராகக் கருதப்பட்டு இப்பொழுது விலக்களிக்கப் பட்டுள்ள மக்களும் இதில் அக்கறை காட்டி வருகிறார்கள். அவர்கள் இனத்தைச் சேர்ந்த வர்கள் 75 பேர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர் களாக இருக்கின்றனர். இவ்வுறுப்பின ரிடையே இத்தொழிலை வளரச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கைக்குத்தல் தொழில் மாதிரி நிலையமும் நடத்தப்பட்டு வரு கிறது. கைக்குத்தல் தொழில் சம்பந்தமாக புது முறைகள் 45 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 'அக்மார்க்' அடையாள முறையும் இச்சங்கத்தால் கை யாளப்பட்டு வருகின்றது. வேலை செய்வதற் கான கூடம், கிட்டங்கி, உலர்த்தும் இடம் முதலியன வைக்கப்படவும் உத்தேசிக்கப்பட் டுள்ளது.

இத்தொழிலைப் பரப்பி, பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இச்சங்கம் முயற்சி எடுத்துவரும்.

சித்தர் மருத்துவத்தில் முதலிடம் வகிப்பது பனங்கற்கண்டு!

கடந்த 7 ஆண்டுகளில் இச்சங்கத்தின் சாதனைகள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு		உறுப்பினர்கள் எண்ணிக்கை	அளிக்கப்பட்ட பங்கு மூலதனம்	உற்பத்தி மதிப்பு	விற்பனை மதிப்பு	தொழிலாளர்கள் எண்ணிக்கை	அளிக்கப்பட்ட ஊதியம்	இலாபம் அல்லது நஷ்டம்
			ரூ.	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
1957—58	...	37	1,665	7,671	7,658	10	613	+ 675
1958—59	...	43	740	35,590	37,152	18	2,781	+ 2,612
1959—60	...	35	415	41,962	43,763	22	4,376	+ 2,876
1960—61	...	46	714	47,992	36,875	28	2,908	— 1,053
1961—62	...	62	794	56,412	60,095	31	5,324	+ 94
1962—63	...	75	893	78,794	60,712	35	6,036	+ 1,588
1963—64 (பிப்ரவரி 29 முடிய)	...	75	757	67,453	52,338	39	5,482	+ 1,521

நாட்டின் பாதுகாப்புக்கு
ஆபத்து ஏற்பட்டுள்ளது,
முழு வலிமையுடன் அதைக் காருங்கள்.
—ஜவாஹர்லால் நேரு



அவசியமானபோது மட்டுமே வாங்குங்கள்

அவசியம் இல்லை என்று கருதும்போது பொருள்களை வாங்காதீர்கள் இப்படி சேமிப்பதை அரசாங்க பாதுகாப்பு செக்யூரிட்டிகளில் முதலீடு செயயுங்கள். இதனால் விலைவாசிகள் உயருவதை கட்டுப்படுத்துவதுடன், பாதுகாப்புத் தேவைக்கு அதிக வளங்கள் கிடைக்கும்படியும் செய்கிறீர்கள்.

உங்கள் சேமிப்பு பாதுகாப்பு தேவைக்கு பயன்படுகிறது

No. 31169001/64-2, dated 8—2—1964 of the Madras State Khadi and Village Industries Board, (Secretariat) Madras-9, addressed to the Secretary, Village Industries Wing, Madras-4.

SUB: Acts and Rules—Multi Unit Co-operative Societies Act 1962—Delegation of all powers and authority exercisable by the Central Registrar of Co-operative Societies to Sri D. A. Swayamprakasam, Joint Registrar of Co-operative Societies (Credit)—Regarding.

REF: From the Registrar of Co-operative Societies, Rc. No. 115787/63-C.L. dated 16—12—1963.

A copy of the letter cited together with enclosure is communicated to the Secretary, Village Industries Wing for information.

V. PADMANABHAN,
Secretary.

Copy of G.O. Rt. No. 2107 (Co-operation) Industries, Labour & Co-operation, dated 13—11—1963.

Abstract:

Acts—Multi Unit Co-operative Societies Act, 1942—Delegation of all powers and authority exercisable by the Central Registrar of Co-operative Societies to Sri D. A. Swayamprakasam, Joint Registrar of Co-operative Societies (Credit) Madras–Government of India's notification Re-published.

Read the following:

From the Registrar of Co-operative Societies, Letter No. 115787/63-E 2, dated 24—9—1963.

From the Government of India, Ministry of Community Development and Co-operation (Department of Co-operation) Letter No. 3—17/62-CT, dated 24—10—1963.

ORDER:

The following notification of the Government of India, Ministry of Community Development and Co-operation (Department of Co-operation) to be published in Part II Section 3, Sub-Section (ii) of the Gazettee of India will be re-published in the Fort St. George Gazettee.

NOTIFICATION

In exercise of the powers conferred by Section 5-B of the Multi Unit Co-operative Societies Act, 1942 (6 of 1942), the Central Government hereby directs that all powers or authority exercisable by the Central Registrar of Co-operative Societies under the said Act shall also be exercisable by Sri D. A. Swayamprakasam, Joint Registrar of Co-operative Societies (Credit), Madras in respet of the Multi Unit Co-operative Societies which are or are deemed to be actually registered in the State of Madras.

[True Copy]

Copy of Letter No. 3/5/62-CT, Government of India, Ministry of Community Development and Co-operation, (Department of Co-operation), dated 6—2—1963.

SUB: **Multi Unit Co-operative Societies (Amendment) Act 1962—Supply of copies.**

I am directed to say that the Multi Unit Co-operative Societies Act 1942 has recently been amended by the Parliament.

A copy of this amending Act together with a copy of the principal Act is forwarded herewith for your information.

[True Copy]

Office of the
Registrar of Co-ooperative Societies,
Madras-5.

Endorsement No. D. 34839/63-E2, dated 20—2—1963.

Copy of Letter No. 3/5/62-Ct, dated 6—2—1963 from the Government of India, Ministry of Community Development and Co-operation (Department of Co-operation) is communicated to all the Deputy Registrars on general duty for information.

K. S. KRISHNASWAMY,
For *Registrar.*

[True Copy]

THE MULTI UNIT CO-OPERATIVE SOCIETIES (Amendment) ACT, 1962

AN ACT

Further to amend the Multi Unit Co-operative Societies Act 1942.

Be it enacted by parliament in the Thirteenth year of the Republic of India as follows :

1. *Short Title:* This Act may be called the Multi Unit Co-operative Societies (Amendment) Act, 1962.

2. *Amendment of Section 5-A:* In Section 5-A of the Multi Unit Co-operative societies Act, 1942 (hereinafter referred to as the Principal Act.)

(i) in sub-section (2), for the words "including proposals regarding the formation of new co-operative societies and the transfer thereto of the assets and liabilities of that society". the following shall be substituted namely :—

"Including proposals regarding—

(*a*) the formation of new co-operative societies and the transfer thereto, in whole or in part, of the assets and liabilities of that society ; or (b) the transfer, inwhole or in part, of the assets and liabilities of that society to any other co-operative societies in existence immediately before the date of that meeting of the general body."

(ii) after sub-section (4) the following sub-section shall be inserted, namely :—

"(4-A) Notwithstanding anything contained in this section, where a scheme under sub-section (2) includes any proposel regarding the transfer of the assets and liabilities of any co-operative society to any other existing co-operative society referred to in clause (b) thereof, the scheme shall not be binding on that existing society or the shareholders and creditors there of, unless the proposal regarding such transfer is accepted by the existing society by a resolution passed by a majority of the members present at a meeting of its general body".

3. *Amendment of Section 6:* Section 6 of the principal Act shall be re-numbered as sub-section (i) of that section and after sub-section (1) as so re-numbered, the following sub-section shall be inserted, namely :—

"(2) Every rule made under this section shall be laid as soon as may be after it is made, before each House of Parliment while it is in sesssion for a total period of thirty days which may be comprised in one session or in the successive sessions, and if, before the expiry of the session in which it is so laid or the session immediately following, both Houses agree in making any modification in the rule or both houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be so however that any such modification or annulment shall be without prejudice to the validity of any thing previously done under that rule".

MULTI UNIT CO-OPERATIVE SOCIETIES ACT

ACT, NO. VI OF 1942

(as amended upto 26—10—1961)

The following Act of the Indian Legislature received the assent of the Governor-General on the second March, 1942, and is hereby promulgated for general information.

An Act to provide for the incorporation, regulation and winding up of Co-operative Societies with objects not confined to one province.

WHEREAS it is expedient to provide for the incorporation, regulation and winding up of Co-operative Societies with objects not confined to one province it is hereby enacted as follows :

1. Short title, extent and application, (1) This Act may be called the Multi-Unit Co-operative Societies Act 1942.

(2) It extends to the whole of India except State of Jammu and Kashmir Amended under 34 of 1956.

(3) It applies to all Co-operative Societies with objects not confined to one province incorporated before the commencement of this Act under the Co-operative Societies Act II of 1912, or under any Act relating to Co-operative Societies in force in any Province and to all Co-operative Societies with objects not confined to one province to be incorporated after the commencement of this Act.

2. Co-operative Societies to which this Act applies registered before commencement of this Act (1) A Co-operative Society to which this Act applies which has been registered in any province under the law relating to Co-operative Societies in force in that province shall be deemed in any other province to which its objects extent to be registered in that other province under the law there in force relating to Co-operative Societies, but shall save as provided in sub-sections (2) and (3) be subject for all the purposes of registration, control and dissolution to the law relating to Co-operative Societies in force for the time being in the province in which it is actually registered

(2) Where any such Co-operative Society has established before the commencement of this Act a branch or establishes after the commencement of this Act a branch or place of business in a province other than that in which it is actually registered, it shall, within six months from the commeneement of the Act or the date of establishment of the branch of place of business, as the case may be, furnish to the Registrar of Co-operative Societies of the province in which such branch or place of business is situated a copy of its registered laws, and shall at any time it is required to do so by the said Registrar submit any return and supply any information which the said Registrar might require to be submitted or supplied to him by a Co-operative Society actually registered in that province.

(3) The Registrar of Co-operative Societies of the province in which a branch or place of business such of is referred to in sub-section (2) is situated may exercise in respect of that branch or place of business any powers of audit and of inspection which he might exercise in respect of a Co-operative Society actually registered in the province.

3. Co-operative Societies to which this Act applies registered after commencement of this Act (1) A Society which might, if its objects were confined to one province be registered as a Co-operative Society in any province under the law relating to Co-operative Societies in force in that province shall not withstanding that its objects are not confined to the province in which its principal place of business is to be situated, be deemed for the purposes of registration as a Co-operative Society to be situated wholly in that province, and may be registered by the Registrar of Co-operative Societies of that province in accordance with the law relating to Co-operative Societies for the time being in force in that province and if so registered shall be deemed in any other province to which its objects extend to be duly registered in that other province under the law there in force relating to Co-operative Societies but shall, save as provided in sub-section (2) and (3), be subject for all the purposes of registration, control and dissolution to the law relating to Co-operative Societies in force for the time being in the province in which it is actually registered.

(2) Where any such Co-operative Society establishes a branch or place of business in a province other than that in which it is actually registered it shall within six months from the date of establishment of the branch or place of business furnish to the Registrar of Co-operative Societies of the province in which such branch or place of business is situated a copy of its registered by laws, and shall at any time it is required to do so by the said Registrar submit any returns and supply any information which the said Registrar might require to be submitted or supplied to him by a Co-operative Society actually registered in that province.

(3) The Registrar of Co-operative Societies of the province in which a branch or place of business such as is referred to in sub-section (2) is situated may exercise in resoect of that branch or place of business any powers of audit and of inspection which he might exercise in respect of a Co-operative Society actually registered in that province.

4. Appointment and powers of Central Registrar of Co-operative Sociecies (1) The Central Government may, if it thinks fit appoint a Central Registrar of Co-operative Societies.

(2) The Central Registrar of Co-operative Societies, if appointed, shall exercise in respect of any Co-operative Society to which this Act applies, to the exclusion of provincial Registrar, the powers and functions exercisable by the Registrar of Co-operative Societies of the province in which such Society is actually registered.

5. **Penalty for failure to furnish information required under this Act:** If any Co-operative Society fails to furnish the information which it is required to furnish by or under sub-section (2) of section 2 or sub-section (2) of section 3, or to submit any return required to be submitted under either of these sub-sections, the Society, and any officer or member of the Society responsible for the failure, shall each be liable to fine which may extend to fifty rupees, and the registration of the Society may at the discretion of the Registrar of Co-operative Societies of the province in which the Society is actually registered be cancelled.

"5-A (1) *Inserted under State re-organisation Act of 1956 Act 37 of 1956:* Whereby virtue of the provisions of Part II of the states re-organisation Act 1950 (at any other enactment relating to re-organisation of States, any Co-operative Society which immediately before the day on which the re-organisation takes place) had its objects confined to one State becomes as from that day, a multi-unit Co-operative Society it shall be deemed to be Co-operative Society to which this Act applied and shall be deemed to be actually registered in the State in which the principal place of business of the Co-operative Society is situated.

(2) *Inserted under A. P. and Madras (Alteration of boundaries) Act 1959 (Act 56 of 1959):* If it appears to be the Central Registrar of Co-operative Societies necessary or expedient that any such Society should be reconstituted or re-organised in any manner or that it should be dissolved, the Central Registrar may, with the approval of the Central Government, place before a meeting of the general body of the Society held in such manner as may be prescribed by rules made under this Act, a scheme for the reconstitution, re-organisation or dissolution of the Society including proposals regarding the formation of new Co-operative Societies and the transfer thereto of the assets and liabilities of that Society.

(3) If the scheme is sanctioned by a resolution passed by a majority of the members present at the said meeting, either without modifications or with modifications to which the Central Registrar agrees, he shall certify the scheme and upon certification, the scheme shall, notwithstanding anything to the contrary contained in any law, regulation or by-law for the time being in force, be binding on all the Societies affected by the scheme, as well as the share holders and creditors of all such Socities.

(4) If the scheme is not sanctioned under sub-section (3), the Central Registrar may refer the scheme to such Judge of the appropriate High Court as may be nominated in this behalf by the Chief Justice thereof, and the decision of that Judge in regard to the scheme shall be final and shall be binding on all the Societies affected by the scheme as well as the share holders and creditors of all such Societies.

Explanation: In this sub-section "Appropriate High Court" means the High Court within whole Jurisdiction the principal place of business of the Multi-Unit Co-operative Society is situated.

"5-B. The Central Government may, by notification in the Official Gazettce, direct that any power or authority exercisable by the Central Registrar of Co-operative Societies under this Act shall, in relation to such matters and subject to such conditions as may be specified in the direction, be exercisable also by such Registrar of Co-operative Societies of a State or by such officer subordinate to the Central Government or to a State Government as may be specified in the modification".

5-C (1) *Inserted under the Bombay Re-organisation Act 1960:* Where, in respect of any Co-operative Society specified in the twelfth schedule in which under the provisions of sub-section (1) of Section 5-A becomes a multi-unit Co-operative Society, the Board of Directors unanimously adopts any scheme for the reconstitution, re-organisation or dissolution of the Society, including proposals for the formation of new Co-operative Societies and the transfer thereto of the assets and liabilities and employees of that Society and the State Government of Bombay certifies the scheme at any time before the 1st day of May 1960, then notwithstanding anything contained in sub-section (2) or sub-section (3) or sub-section (4) of the said section or any other law, regulation or by-law for the time being inforce in relation to that Society, the scheme so certified shall be binding on all Societies, affected by the scheme, as well as share holders, creditors and employees of all such Societies, subject to such financial adjustments as may be directed in this behalf under sub-section (3) but no such scheme shall be given effect to before the said day.

(2) When a scheme in respect of a Co-operative Society so certified, the Central Registrar shall place the scheme at a meeting held in such manner as may be prescribed by rules, made under this Act of all the persons who immediately before the date of certification of the scheme where members of the Society and the scheme may be approved by a resolution passed by majority of the members present and voting at the said meeting.

(3) If the scheme is not so approved, or is approved with modification, the Central Registrar may refer the scheme to such Judge of the High Court at Bombay as may be nominated in this behalf by the Chief Justice thereof and the Judge may directs such financial adjustments to be made among the Societies affected as he deems necessary and the scheme shall be deemed to be approved subject to those financial adjustments.

(4) If in consequent of the directions given under sub-sections (3) a Society becomes liable to pay any sum of money, the State within whose area the Society is located shall be liable as guaranter in respect of the payment of such money.

6. Power of the Central Government to make rules—The Central Government may, by notification in the official Gazettee, make rules for carrying into effect the provisions of this Act.

[True Copy]